## இயல் - 3. நாடு அதை நாடு

வகுப்பு : VII

பாடம்: தமிழ் **புலி தங்கிய குகை**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'யாண்டு' என்னும் சொல்லின் பொருள் ______.

அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

2. 'யாண்டுளனோ?' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

அ) யாண்டு + உளனோ? ஆ) யாண் + உளனோ?

இ) யா + உளனோ? ஈ) யாண்டு + உனோ?

3. 'கல் + அளை' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

அ) கல்லளை ஆ) கல்அளை இ) கலலளை ஈ) கல்லுளை

### ஆ. குறுவினா

**1. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?**

தாய் தம் வயிற்றுக்குப் 'புலி தங்கிச் சென்ற குகையை உவமையாகக் கூறுகிறார்.

AAM. KOSAVAPATTY

### இ.சிறுவினா

**1. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகள் :

'சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக்கொண்டு, ஏதும் அறியாதவள் போல நீ "உன் மகன் எங்கே?" என என்னைக் கேட்கிறாய். அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் புலி தங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன்

இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும். போய்க் காண்பாயாக' என்று புலவர் பதிலளித்தார்.

## ஈ.சிந்தனை வினா

### 1. தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?

புறநானூற்றில் கூறப்பட்ட பெண்கள் வீரத்தில் சிறந்திருந்தனர். நாட்டைக் காக்கப் போர்க்களம் செல்வதைத் தம் முதன்மையான கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். அப்பண்பாட்டில் வளர்ந்த தாய் தன் மகனுடைய வீரத்தை உணர்த்தும் விதமாகத் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுகிறாள்.

# 3. பாஞ்சை வளம்

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஊர்வலத்தின் முன்னால்.................. அசைந்து வந்தது.

அ) தோரணம் ஆ) வானரம் **இ) வாரணம்** ஈ) சந்தனம்

2.பாஞ்சாலங்குறிச்சியில் ............... நாயை விரட்டிடும்.

**அ) முயல்** ஆ) நரி இ) பரி ஈ) புலி

3.மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது ..................

அ) மெத்தை விரிக்கப்பட்ட வீடு ஆ) படுக்கையறை உள்ள வீடு

இ) மேட்டுப் பகுதியில் உள்ள வீடு **ஈ) மாடி வீடு**

4. 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...

அ) பூட்டு + கதவுகள் **ஆ) பூட்டும் + கதவுகள்**

இ) பூட்டின் + கதவுகள் ஈ) பூட்டிய + கதவுகள்

5. 'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............

AAMS KOSAVARATI

அ) **தோரணம் + மேடை** ஆ) தோரண + மேடை

இ) தோரணம் + ஓடை ஈ) தோரணம் + ஓடை

6. வாசல் + அலங்காரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்...........

அ) வாசல் அலங்காரம் ஆ) வாசலங்காரம்

இ) வாசலலங்காரம் ஈ) வாசலிங்காரம்

## ஆ. பொருத்துக

1. பொக்கிஷம் - செல்வம்
2. சாஸ்தி - மிகுதி
3. விஸ்தாரம் - பெருமபரப்பு
4. சிங்காரம் - அழகு

## இ. குறுவினா

**1. பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டைகள் பற்றிக் கூறுக.**

பாஞ்சாலங்குறிச்சி நகரில், பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருக்கும். அவை எல்லாம் மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாகக் கட்டப்பட்டிருக்கும்.

**2. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**

பூஞ்சோலைகளும் சந்தன மரச் சோலைகளும் ஆறுகளும் நெல்வயல்களும் பாக்குத் தோப்புகளும் அந்நாட்டிற்கு அழகு சேர்க்கும் இயற்கை வளங்களாகும். சோலைகளில் குயில்கள் கூவும். மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும்.

## ஈ.சிறுவினா

**1. பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**

பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள வீடுகள் தோறும் மணிகளால் அழகு

செய்யப்பட்ட மேடைகள் இருக்கும். வீடுகள் எல்லாம் மதில்களால் சூழப்பட்ட மாடி வீடுகளாக இருக்கும். வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்தவையாகவும் இருக்கும்.

**2.பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.**

வீரம் மிகுந்த நாடாகிய பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்க வரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டி விடும். பசுவும் புலியும் நீர்நிலையின் ஒரே துறையில் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.

## உ.சிந்தனை வினா

**1. நாட்டுப்புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் என்ன?**

(i) நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் என்பது வாய்மொழி இலக்கியம் என்று கூறுவர். கட்டபொம்மன் வீரம் பற்றி உலகமே அறியும். நம் நாட்டிலுள்ள அரசர்கள், குறுநில மன்னர்கள் எல்லோரும் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்குப் பயந்து வரி செலுத்தினார்கள்.

(ii) ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட மன்னர்கள் சிலருள் கட்டபொம்மனும் ஒருவர். அவர் ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்தாமல் வரி கேட்க வந்தவர்களுடன் விவாதம் செய்து எதிர்த்து நின்றார்.

# தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ. முத்து ராமலிங்கத்தேவர்

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.முத்துராமலிங்கத்தேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம் .......

அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி **இ) சாயல்குடி** ஈ) மன்னார்குடி

2.முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர்...

அ) இராஜாஜி **ஆ) நேதாஜி** இ) காந்திஜி ஈ) நேருஜி

3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர்.......

அ) இராஜாஜி ஆ) பெரியார் **இ) திரு.வி.க.** ஈ) நேதாஜி

## ஆ. குறுவினா

**1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?**

(i) தேசியம் உடல், தெய்வீகம் உயிர் எனக் கருதி மக்கள் தொண்டு செய்தவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.

(ii) இவர் வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர்; உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித் துணிச்சல் பெற்றவர் இவரைச் சுத்தத் தியாகி என்று தந்தைப் பெரியார் பாராட்டினார்.

**2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?**

முத்துராமலிங்கத்தேவர் மேடைகளில் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர்.

அதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும் வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது.

**3. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.**

சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பலதுறைகளிலும் ஆற்றல் உடையவராக முத்துராமலிங்கத்தேவர் விளங்கினார்.

## இ.சிறுவினா

**1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்பு பற்றி எழுதுக.**

(i) வங்கச் சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

(ii) முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்றுக் கி.பி. (பொ.ஆ.) 1939-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறாம் நாள் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார்.

(iii) நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர். விடுதலைக்குப் பின் நேதாஜி என்னும் பெயரில் வார இதழ் ஒன்றையும் நடத்தினார்.

**2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**

(i) 1938 காலக்கட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார்.

(ii) மதுரையிலிருந்த நூற்பு ஆலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப. ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார்.

(iii) அதற்காக ஏழு திங்கள் சிறைத் தண்டனைப் பெற்றார். உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார். பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

## ஈ.சிந்தனை வினா

**1. சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

சிறந்த தலைவருக்குரிய பண்புகள் :

(i) நல்ல குண இயல்புகள் கொண்டு இருக்க வேண்டும். செயல்பாடுகள் நல்லதாக இருக்க வேண்டும். வெறும் அறிவு மட்டுமே இருந்தால் ஒருவருக்கு தலைமைப்பண்பு இருக்கின்றது என்று கருத முடியாது. அறிவு, அனுபவம், மனிதர்களை மதித்து நடந்து கொள்ளும் பண்பு ஆகியவற்றைக் கொண்டவரே சிறந்த தலைவர்.

(ii) மக்களின் வறுமைகளையும், இன்னல்களையும் போக்குபவரே சிறந்த தலைவர். கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டும்; மேல் மட்டத்திலுள்ள மக்களின் நலனையும் பேணி காக்க வேண்டும்.

(iii) அனைவரையும் சமமாக நடத்த வேண்டும். உயர்ந்தவர் தாழ்ந்தவர் எனப் பிரிக்காமல், இருவரும் ஒருவரே என அரவணைத்து செல்வதே சிறந்த தலைவருக்குரிய பண்புகளில் ஒன்றாகும்.

(iv) சிறந்த தலைவரானவர் பிறரது மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி திறமையாகச் செயல்பட வைக்கும் ஆற்றல் உள்ளவர்களாக இருப்பர். இதுவரை வெளிப்படுத்தாமலிருந்த திறமைகளையும் மக்களிடமிருந்து வெளிக்கொணரும் வகையில் இவர்களது செயல்பாடு அமையும், இவர்களது அணுகுமுறையும், செயல்பாடுகளும் பிறரையும் சிறப்பாக செயல்படத் தூண்டும் வகையில் இருக்கும்.

(v) மக்களிடத்தில் எந்தவித பாகுபாடும் இல்லாமல், பய உணர்ச்சியும் இல்லாமல், நடந்து கொள்ளுதல், செயல்களுக்கு பொறுப்பேற்றுக் கொண்டு செயல்படுதல், வெற்றி என்றாலும் சரி, தோல்வி என்றாலும் சரி அதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் போன்றவை சிறந்த தலைவருக்குரிய பண்புகள் ஆகும்.

## 3. வழக்கு

**அ.பொருத்துக**

1. பந்தர் - கடைப்போலி
2. மைஞ்சு - முதற்போலி
3. அஞ்சு - முற்றுப்போலி
4. அரையர் - இடைப்போலி

**ஆ. குறுவினா**

**1. வழக்கு என்றால் என்ன?**

நம் முன்னோர் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

**2. தகுதி வழக்கின் வகைகள் யாவை?**

தகுதி வழக்கின் வகைகள்.

தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவை

- இடக்கரடக்கல்
- மங்க லம்
- குழூஉக்குறி

**3. வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது - இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.**

இத்தொடரில் இடம் பெற்றுள்ள போலிச் சொல் நஞ்சுவிட்டது. அதன் சரியான சொல் 'நைந்து' விட்டது.

# மொழியோடு விளையாடு

## அ. பின்வரும் தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க

1. வீரர்கள் நாட்டைக் காத்தனர்
2. பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்.
3. கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீன்கொடி பறந்தது.
4. திருக்குறளை எழுதியவர் யார்?
5. கபிலர் குறிஞ்சிப்பாட்டை எழுதிய புலவர்.

| வ.எண் | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1 | வீரர்கள் | காத்தனர் | நாட்டை |
| 2 | பொதுமக்கள் | தீயிட்டு எரித்தனர் | அந்நியத் துணிகளை |
| 3 | பாண்டியன் | மீன்கொடி பறந்தது | கொற்கைத் துறைமுகத்திலே |
| 4 | யார் | எழுதியவர் | திருக்குறள் |
| 5 | கபிலர் | எழுதிய புலவர் | குறிஞ்சிப்பாட்டை |

AAMS KOSAVAPATTI

## ஆ. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும்படி ஐந்து தொடர்களை எழுதுக.

1. மன்னர் நல்லமுறையில் நாட்டை ஆண்டார்.
2. குழந்தை பழத்தைத் தின்றது.
3. மாணவர்கள் பாடத்தைப் படித்தனர்.
4. ஓவியர் ஓவியத்தை வரைந்தார்.

5. சிறுவன் மிதிவண்டியை ஓட்டினான்.

## இ. கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக

### நான் விரும்பும் தலைவர்

திரு.வி. கல்யாணசுந்தரனார் :

**முன்னுரை :**

திரு.வி.க. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள துள்ளம் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் விருத்தாசலம், சின்னம்மா. இவரின் முன்னோர்கள் திருவாரூரைச் சேர்ந்தவர்கள்.

**இளமைக் காலம் :**

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னை இராயப்பேட்டையில் வெஸ்லி பள்ளியில் பயின்றார். நான்காம் வகுப்பு படிக்கும் போது உடல் நிலை பாதிக்கப்பட்டதால் படிப்பு தடைப்பட்டது. வெஸ்லி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம்.

நா. கதிர்வேற்பிள்ளை என்பவரிடம் தமிழும் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ் மற்றும் சைவ நூல்களையும் கேட்டறிந்தார். பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதங்களையும் ஜஸ்டிஸ் சதாசிவராவ் அவர்களின் தொடர்பால் ஆங்கில அறிவையும் பெற்றார்.

**விடுதலை இயக்கம் :**

விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. தேசபக்தன்' பத்திரிகையின் ஆசிரியராக இரண்டரை ஆண்டுகள் இருந்தார். தனது எழுச்சிமிக்க எழுத்துகளால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களைப் பொங்கி எழச் செய்தார். அந்நிய அடக்குமுறையை எதிர்த்து மேடைகளில் ஆவேசமாக உரையாற்றினார். காந்தியடிகள் சென்னையில் ஆற்றிய உரையை அற்புதமாக மொழிபெயர்த்து காந்தியடிகளிடம் பாராட்டு பெற்றார். இவருடைய அரசியல் குரு திலகர் ஆவார்.

தமது பேச்சால் தமிழ் வளர்த்தவர். திரு.வி.க. நடை என்றே ஒரு தனிநடையை நடைமுறைப்படுத்தும் அளவுக்குப் பேசுவது போலவே எழுதுவது; எழுதுவது போலவே பேசுவது என்னும் முயற்சியில் வெற்றி கண்டவர். பிணிக்கும் தகைவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம் பேசுவதில் வல்லவர். அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை உணர்ச்சிமிகு பேச்சினால் தம்பால் ஈர்த்து மேடைத்தமிழின் முன்னோடியாகத் திகழ்ந்த வர். திரு.வி.க.

முடிவுரை :

செய்யுள் நூல்கள், உரைநடை நூல்கள் எனப் பல நூல்களை இயற்றியுள்ளார். தேசபக்தன் , நவசக்தி என்னும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம் பெறப் பாடுபட்டவர்.

## மொழியோடு விளையாடு

### அ. இடைச்சொல் ‘கு’ சேர்த்துத் தொடரை எழுதுக.

(எ.கா) வீடு சென்றான் - வீடு + கு + சென்றான் - வீட்டுக்குச் சென்றான்

1. மாடு புல் கொடுத்தார்

   மாடு + கு + புல் கொடுத்தார் - மாட்டுக்குப் புல் கொடுத்தார்.

2. பாட்டு பொருள் எழுது

   பாட்டு + கு + பொருள் எழுது - பாட்டுக்குப் பொருள் எழுது.

3. செடி பாய்ந்த நீர்

   செடி + கு + பாய்ந்த நீர் - செடிக்குப் பாய்ந்த நீர்.

4. முல்லை தேர் தந்தான் பாரி.

   முல்லை + கு + தேர் தந்தான் பாரி - முல்லைக்குத்தேர் தந்தான் பாரி.

5. சுவர் சாந்து பூசினான்.

   சுவர் + கு + சாந்து பூசினான். - சுவருக்குச் சாந்து பூசினான்.

## ஆ. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| கண் | அழகு | கண்ணழகு | கண்ணுண்டு |
| மண் | | மண்ணழகு | மண்ணுண்டு |
| விண் | உண்டு | விண்ணழகு | விண்ணுண்டு |
| பண் | | பண்ணழகு | பண்ணுண்டு |

## இ. அகம் என முடியும் சொற்களை எழுதுக

(எ.கா.) நூலகம்

1. உணவகம்
2. காப்பகம்
3. மருந்தகம்
4. இனிப்பகம்
5. அடுக்ககம்

## ஈ. கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக

(எ.கா) திருக்குறள் ங பால்களைக் கொண்டது.

1. எனது வயது கஉ
2. நான் படிக்கும் வகுப்பு எ
3. தமிழ் இலக்கணம் ரு வகைப்படும்.
4. திருக்குறளில் கங அதிகாரங்கள் உள்ளன.
5. இந்தியா ககூசஎ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

## உ. குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ப் | பூ | ர் | கு | ம | ர | ன் |
| ரு | தா | கா | ன் | க | க் | க | நா | லை |
| வ | ந் | ம | யா | ர் | டு | ட் | க | ம |
| ள் | ஜி | ரா | ஜா | யா | ர் | ட | ம் | ன |
| ளி | ஜா | ச | ர | தி | யா | பொ | மை | ன் |
| ய | ரா | ர் | னா | ர | ப | ம் | த | சி |
| ம் | இ | டி | ண் | பா | ர | ம | மி | ற |
| மை | வா | ஞ் | சி | நா | த | ன் | ழி | ப் |
| ர் | யா | சி | ச் | நா | லு | வே | ல் | பு |

1. மூதறிஞர்
2. வீரமங்கை
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன்
4. வெள்ளையரை எதிர்த்த தீரன்
5. கொடிகாத்தவர்
6. எளிமையின் இலக்கணம்
7. தில்லையாடியின் பெருமை
8. கப்பலோட்டிய தமிழர்
9. பாட்டுக்கொரு புலவன்
10. விருதுப்பட்டி வீரர்
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி
12. மணியாட்சியின் தியாகி

1. மூதறிஞர் - இராஜாஜி
2. வீரமங்கை - வேலுநாச்சியார்
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன் - கட்டபொம்மன்
4. வெள்ளையரை எதிர்த்த தீரன் - சின்னமலை
5. கொடி காத்தவர் - திருப்பூர் குமரன்
6. எளிமையின் இலக்கணம் - காமராசர்
7. தில்லையாடியின் பெருமை - வள்ளியம்மை

8. கப்பலோட்டிய தமிழர் - சிதம்பரனார்
9. பாட்டுக்கொரு புலவன் - பாரதியார்
10. விருதுப்பட்டி வீரர் - காமராசர்
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி - நாகம்மை
12. மணியாட்சியின் தியாகி - வாஞ்சிநாதன்

AAMS KOSAVAPATTY